தலைப்பு 252 - தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் -2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 252 - தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஆகஸ்ட் 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியின் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலிருந்து நிதி நிலைமை, நிதி செயலாற்றல், காசுப்பாய்ச்சல் என்பன நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I இல் குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்ததமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 ஒரு வியடத்தினை வலியுறுத்துதல் - நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I தொடர்பாக கவனம் செலுத்துகிறேன். நிதிக்கூற்றுக்களானது அரசாங்க நிதிப்பிமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின், பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டது. அதன் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் ஏனைய நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கலாம். எனது அறிக்கையானது தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின், பொது திறைசேரியின் மற்றும் இலங்கை

பாராளுமன்றத்தின் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் மாற்றம் செய்யப்படமாட்டாது.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரசாங்க நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரிவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் ரோகவைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான

ஆவணங்களை தயாரித்தல் வேண்டுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.6. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i)	திணைக்களத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு 2011 ஆம் ஆண்டில் கடன் நிவாரண அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களுக்குரிய கடன் பணத்தை தவணை ரீதியாக அறவீடு செய்யப்பட்டதன் பின்னர் உத்தியோகத்தர்களின் பெயருக்கு ஒப்படைக்கப்பட்ட பெறுமதி ரூபா 1,370,000 ஆன 29 மோட்டார் சைக்கிள்களை CIGAS இன்வென்டரியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக நிதி	வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு 2011 ஆம் ஆண்டில் கடன் நிவாரண அடிப்படையில் வழங்கப்பட்ட 29 மோட்டார் சைக்கிள்களுக்கான கடன் பணத்தை தவணை ரீதியாக உத்தியோகத்தர்களுடமிருந்து அறவீடு செய்ததன் பின்னர் உரிய மோட்டார் சைக்கிள்கள் அவர்களின் பெயருக்கு மாற்றப்பட்டிருந்தும் உரிய மோட்டார் சைக்கிள்கள் CIGAS இன்வென்டரியிலிருந்து நீக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக இன்னும் பரீட்சித்துப் பார்த்து CIGAS சொத்துக்கள் பதிவேட்டினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதியை சரியாகக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட ஆதனம், பொறி உபகரணங்களின் பெறுமதி அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.		
(ii)	2020 ஆகஸ்ட் மாதம் 20 மற்றும் 25 ஆந் திகதிகளில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 12,000,000 பெறுமதியான இரண்டு வேன்கள் CIGAS நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி அத்தொகையால் குறைத்து காட்டப்பட்டிருந்தது.	இந்த இரண்டு வாகனங்களும் CIGAS சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படாததனால் எதிர்வரும் காலங்களில் CIGAS சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	-மேற்படி-
(iii)	மீளாய்வாண்டின் இறுதியில் பாவனைப்பொருட்களாக அடையாளம் காணப்பட வேண்டிய ரூபா 34,161,849 மொத்தப் பெறுமதியான பல வகையைச் சேர்ந்த பொருட்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதியப்பட்டிருந்ததனால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	பாவனைப் பொருட்களாக அடையாளங்காணப்பட்ட 251 அளவிலான வகையைச் சார்ந்த ரூபா 12,114,923 பெறுமதியான 10,000 பொருட்களை 2024-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதியற்ற சொத்துக்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இன்னும் CIGAS இன்வொன்டரியில் உள்ளடக்கி காணப்படுகின்ற பாவனைப் பொருட்கள் தொடர்பாக பரீட்சிக்கப்பட்டு வருவதுடன் அப்பொருட்களை எதிர்வரும் காலங்களில் நிதியற்ற சொத்துக்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கிறேன்.	-மேற்படி-

2. ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் தொடர்புபட்டன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவு முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	03 மூலதன செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட மொத்தமாக ரூபா 113,013,179 நிதி ஏற்பாடு மீளாய்வாண்டின் போது எந்த பயன்பாட்டினையும் மேற்கொள்ளாது முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.	அந்த நிதி ஏற்பாடு பின்வரும் செயற்பாடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒரு நிறத்தீர்ப்பனவு இயந்திரம் மற்றும் ஒரு அச்சிடல் இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்காக ரூபா 95,000,000, மென்பொருளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 3,000,000, Conference kit ஒன்றினை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளுக்காக ரூபா 15,013,179 ஆக மொத்தமாக ரூபா 113,013,179 ஆகும். ஒரு அச்சிடல் இயந்திரம் மற்றும் ஒரு வர்ணத் தீர்ப்பனவு இயந்திரத்தினை கொள்வனவு செய்யும் நடவடிக்கையானது சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு கடமை மற்றும் தேர்தல் கடமையின் காரணமாக இந்த ஆண்டில் முடிவுசெய்ய முடியாதிருந்தது. Confcrence Kit ஒன்றினை கொள்வனவு செய்வதற்குரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் பெறுகைச் செயற்பாடுகளுக்காக காலம் போதுமானதாக இல்லாததனால் உரிய செயற்பாட்டினை முடிவு செய்ய முடியாதிருந்தது.	வருடாந்த செலவு மதிப்பீட்டினை சரியாகவும் நடைமுறைச்சாத்தியமாகவும் தயாரித்தல் வேண்டும்.

(ஆ)	08 மூலதன செலவு விடயங்களின் மொத்தமாக ரூபா 1,322,153,674 ஆன நிதி ஏற்பாட்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் மொத்தமாக ரூபா 387,450,414 ஆன நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது ஒவ்வொரு செலவு விடயத்திற்காகவும் வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 11 சதவீதத்திலிருந்து 41 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்து.	திருத்தம் செய்வதற்குரிய மதிப்பீட்டினை வழங்கும் தாமதம், திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்களுக்கு அதிக அளவிலான திருத்தங்கள் ஏற்படாமை மற்றும் குடித்தொகை மற்றும் வீட்டுக் கணிப்பின் ஆளணியினர் பயிற்சி செலவுகள் அந்த செலவு விடயங்களின் கீழ் செலவு செய்தல் மற்றும் சில ஆளணியினரின் பயிற்சி கற்கை நெறிகளை மட்டுப்படுத்த வேண்டி ஏற்பட்டமை, மீளாய்வு கடமைகளுக்காக உத்தியோகத்தர்களுக்கு படிகளைச் செலுத்தும் போது கொடுப்பனவுகளை சுற்றறிக்கையிலுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு செலுத்துதல், குடித்தொகை மற்றும் வீட்டுக் கணக்கொடுப்பு நடவடிக்கைகளின் தாமதத்தின் காரணமாக கமத்தொழில் மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை, குடிநீரின் தரம் தொடர்பாக வீட்டு மீளாய்விற்குரிய அறிக்கையினை அச்சிடும் நடவடிக்கை இடம்பெறாமை என்பவற்றின் காரணமாக நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது.	-மேற்படி-
(இ)	08 மீண்டுவரும் செலவு விடயங்களின் மொத்தம் ரூபா 74,170,500 நிதி ஏற்பாட்டில் மீளாய்வாண்டின் இறுதியில் மொத்தமாக ரூபா 11,132,146 ஆன நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது ஒவ்வொரு செலவு விடயத்திற்குமாக வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 11 சதவீதத்திலிருந்து 32 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.	குடித்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு - 2021 வெளிக்கள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக ஏனைய கணக்கெடுப்புக்களின் வெளிக்கள நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்படல் அச்சிடல் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு சீருடைப் படிகளுக்கான அங்கீகாரம் கிடைக்காமை, சிறிய திருத்த வேலைகள் இடம்பெறாமை மற்றும் போக்குவரத்து படிகளுக்கு தகமையுள்ள நிறைவேற்று உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றிருத்தல் மற்றும் திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டிடங்களின் நிகழ்கால பெறுமதியை திருத்தம்	-மேற்படி-

		செய்யாமையின் காரணமாக எதிர்பார்த்தவாறு குத்தகைப் பணம் திருத்தம் செய்யப்படாமை ஆகிய விடயங்களின் அடிப்படையில் நிதி எற்பாாடு சேமிக்கப்பட்டுள்ளது.	
(ஈ)	செலவு விடய இலக்கம் 25-2507(13) குடிநீரின் தரம் தொடர்பாக வீட்டு மீளாய்வாவிற்காக (யுனிசெப்) ரூபா 1,065,244 குறைநிரப்பு மதிப்பீட்டு நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந் ததுடன் அதில் ரூபா 391,244 அல்லது 37 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.	இந்த நிதி ஏற்பாட்டினை ஈடுபடுத்தி இந்த மீளாய்விற்குரிய அறிக்கையினை மூன்று மொழிகளிலும் அச்சிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் அதற்காக எஞ்சியுள்ள நிதி ஏற்பாடு போதியதாக இல்லாததன் காரணமாக அறிக்கையை அச்சிடுவதற்குத் தேவையான நிதி ஏற்பாட்டினை ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் மூலம் பெற்று அச்செயற்பாட்டினை முடிவு செய்வதற்கு எதிர்பார்க்கிறேன்.	-மேற்படி-
(உ)	செலவு விடய இலக்கம் 25-2507(15) ஆசிய பசுபிக் வலயத்தின் சர்வதேச ஒப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்காக (ஆ.ஒ.நி) ரூபா 8,388,430 ஆன குறைநிரப்பு மதிப்பீட்டு நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந் ததுடன் அதில் ரூபா 904,900 அல்லது 11 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.	இந்த மீளாய்வு கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு படிகளைச் செலுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இப்பணம் ஏனைய மீளாய்வு கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு படிகளைச் செலுத்தும் போது தொடர்புபடுத்தப்பட்ட பொது கொடுப்பனவு நடைமுறைகள் தொடர்பாக சுற்றறிக்கையிலுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டதனால் இந்த நிதி ஏற்பாடு சேமிப்பாக இருந்தது.	-மேற்படி-

3.2 அரசாங்க உத்தியோகத்ரத்களுக்கான முற்பணங்கள் பீ கணக்கு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டின் இறுதியளவில் ஒய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிரு ந்து அறவிட வேண்டிய ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட கடன் மீதி ரூபா 192,880 ஆகும்.	ஒய்வுபெற்றுச் சென்ற குறியீட்டு இலிகிதர் உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 192,880 பணத்திற்கான வழங்கல் பத்திரம் இதுவரை கிடைத்திருக்காததனால் இப்பணத்தை அறவீடு செய்ய முடியாதுள்ளது.	கடன் மீதியை அறவீடு செய்வற்கு எடுத்த நடவடிக்கைகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) சேவையை கைவிட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து 05 ஆண்டுகளிலிருந்து 12 ஆண்டுகள் வரையான காலமாக அறவிடப்படாது காணப்பட்ட கடன் மீதியின் மொத்தம் ரூபா 259,174 ஆக இருந்ததுடன் சேவையை கைவிட்டுச் சென்று 18 மாதங்களுக்கு மேற்பட்ட இன்னுமொரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 107,200 ஆகும். அக்கடன் மீதியை அறவீடு செய்வதற்கு 2025 மே 30 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஒரு புள்ளிவிபர உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 95,140 கடனை அறவீடு செய்வதற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அலுவலக ஊழியர் சேவையிலுள்ள ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 59,140 பணத்திற்காக ஆலோசனையை பெற்றுக்கொள்வதற்கு சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இன்னுமொரு அலுவலக சேவையிலுள்ள ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 104,250 பணத்தினை அறவீடு செய்வது சம்பந்தமாக அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. சேவையை கைவிட்டுச் சென்ற ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 107,200 கடன் மீதியை அறவீடு செய்வதற்காக அவர் தொடர்பான தகவல்கள் ஹங்வெல்ல பொலிஸ் நிலையத்திடம் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை அதற்காக பதில் கிடைக்கவில்லை.	-மேற்படி-

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 தூர நோக்கும் செயற்பணியும்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
உரிய நேரத்தில் சரியான தரவுகளை வழங்குவதன் மூலம் மிகவும் வினைத்திறனாக நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல் திணைக்களத்தின் செயற்பணியாகும். அதற்கிணங்க திணைக்களத்தினால் தரவுகளை இணையதளத்தில் தரவு ஏற்றம்	பதில் வழங்கப்படவில்லை.	தீர்மானம் எடுத்தலினை வசதியாக்குவதற்காக நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதியினுள் தரவு அறிக்கைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

செய்தல் மற்றும் அச்சிட்டு விடுவித்தல் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்காக பல தொகை மதிப்புக்கள் மற்றும் மீளாய்வின் மூலம் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் அச்சிடுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த 23 தரவு அறிக்கைகள் நிரணயிக்கப்பட்ட திகதியில் அச்சிடப்படாதிருந்ததுடன் தரவு ஏற்றம் செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த 39 தரவு அறிக்கைகள் 2025 ஏப்ரல் 02 ஆந் திகதி வரை இணைய தளத்திற்கு வழங்கப்படடவில்லை. அவ்வாறே 19 தரவு அறிக்கைகள் 07 மாதங்களுக்கும் 06 மாதங்களுக்கும் இடைப்பட்ட கால வீச்சிலான தாமதத்தின் பின்னர் இணைய தளத்தில் தரவு ஏற்றம் செய்யப்பட்டிருந்தது.		

4.2 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சமூக விஞ்ஞான மற்றும் சுகாதார மீளாய்விற்குரிய (DHS) கணனி சார்ந்த தனிப்பட்ட தகவல் முறைமையை அபிவிருத்தி செய்யும் (CAPI System) செயற்பாடு உரிய பிரிவு மற்றும் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப பிரிவினால் 100% நிறைவேற்றப்பட வேண்டி இருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை உரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படுகின்ற இந்த மீளாய்வு கடைசியாக 2016 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது.	பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.	தொகை மதிப்பு மற்றும் மீளாய்வினை நிர்ணயிக்கப்பட்டவாறு மேற்கொண்டு உரிய காலத்தில் சரியான தரவுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை செயற்படுத்துதல் வேண்டும்.

(ஆ)	வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் சயிபர் பாதுகாப்பு மீளாய்வு மென்பொருள் அபிவிருத்திக்குரிய (Cyber Security Survey Software Development) செயற்பாடுகள் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப பிரிவு மற்றும் மாதிரி மீளாய்வு பிரிவின் மூலம் 100% நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.	-மேற்படி-	-மேறபடி-

4.3 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டம் பெற்றுக்கொள்ளப்படாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	வருடாந்த செயலாற்றல் அறிக்கைக்கு இணங்க திணைக்களத்தின் 05 பிரிவுகளுக்குரிய 05 செயற்பாடுகளின் பௌதீக செயல்முன்னேற்றம் 15% இற்கும் 40% இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.	• **தேசிய கணக்குகள் பிரிவு** சனத்தொகை மற்றும் வீட்டு வசதிகள் கணக்கெடுப்பு - 2024 தொடர்பான கடமைகள் அதிக அளவில் காணப்பட்டதனால் லொஜிஸ்டிக் கம்பனிகளிலிருந்து தரவுகளை சேகரிப்பதற்குரிய கணனி நிகழ்ச்சித்திட்டத்தினை தயாரிக்கும் நடவடிக்கை தாமதமடைந்துள்ளது. • **வெளிக்கள முகாமைத்துவ பிரிவு** பிரதான மின்சார முறைமையில் உருவாகியுள்ள கோளாறுகளின்	திட்டமிடப்பட்டவாறு எதிர்பார்தத பூரத்தியாக்கல் மட்டத்தை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

காரணமாக நீண்ட காலத்திற்கு திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் இணைய தளம் செயல் இழப்பதன் காரணமாக ஒன்லைன் முறைமையினூடாக இச்செயலமர்வினை நடாத்துவதற்கு முடியாதிருக்கும். அதன் பின்னர் குடித்தொகை மற்றும் வீட்டு வசதிகள் கணக்கெடுப்பின் கடமைகளுக்காக உத்தியோகத்தர்கள் பங்குபற்றியுள்ளதனால் வருடாந்த பயிற்சி செயலமர்வினை நடாத்துவதற்கு முடியாதிருந்தது.

- **பயிற்றுவித்தல் பிரிவு**

  திணைக்களத்தின் உதவி ஆளணியினருக்கு திணைக்களத்திற்கு உள்ளேயும் வெளியேயும் குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

  சனத்தொகை மற்றும் வீட்டு வசதிகள் கணக்கெடுப்பு நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தியதனால் திட்டமிடப்பட்டவாறு பயிற்சி நிகழச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு முடியாதிருந்தது.

	• **ஆராய்ச்சி மற்றும் விசேட ஆய்வுப் பிரிவு** **Annual Magazine of official Statistics related articles by Department of censes and statistics of officials** குடித்தொகை மற்றும் வீட்டு வசதிகள் கணக்கெடுப்பின் கடமைகளுக்காக ஆளணியினரை ஈடுபடுத்தியமை காரணமானதுடன் திணைக்களம் எதிர்வரும் காலங்களில் நாடாத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தொகைமதிப்பு முடிவடையும் வரை இந்த வெளியீட்டினை மேற்கொள்வதனை தற்காலிகமாக நிறுத்திவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.	

4.4 செத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பாக நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற சேவர் கணனி அறையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தொடர்ச்சியாக வெப்பத்தை ஒழுங்குபடுத்துவதற்கு தேவையான (Precision air cooling system) இரண்டு குளிரூட்டும் முறைமைகளில் Teenair வகையான இயந்திரம் 02 ஆண்டுகளாக செயற்படாது காணப்பட்டதுடன் Liebert	Technair வாயு சீராக்கி இயந்திரத்தினை திருத்தம் செய்வதற்காக நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ரூபா 1,236,500 ஆன மதிப்பீட்டிற்கு இணங்க திருத்தம் செய்தல் வினைத்திறனானதா என்பதனை தீர்மானிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால்	தரவுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு எடுக்ககூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் அத்தியவசியமானதாகும்.

வகையான இயந்திரத்தில் 09 மாதங்களாக தொழில்நுட்ப கோளாறு காணப்படுகின்றது எனவும் தற்காலிக குளிரூட்டும் தேவைப்பாட்டிற்காக காணப்படுகின்ற Frostair வகையான சாதாரண குளிரூட்டும் முறைமையும் செயற்பாடற்று காணப்படுகின்றது எனவும் அவதானிக்கப்பட்டது. மேலும் அதற்காக மின்சார இணைப்புக்களைப் பெற்றுக்கொள்ளுகின்ற UPS இயந்திரத்தின் உத்தரவாத காலம் மிகைத்துள்ளது எனவும் அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க முக்கியத்துவம் வாய்ந்த தரவுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக திணைக்களத்தினால் 2025 மே 30 ஆந் திகதி வரை முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

2025 யூன் 11 ஆந் திகதி வழங்கிய குழு சிபாரிசுக்கு இணங்க அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திடமிருந்து தொழில் நுட்ப ரீதியான சாத்தியவள ஆய்வு அறிக்கையினைப் பெற்றுக்கொண்டு அதன் சிபாரிசுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

சேவர் கணனி அறையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள வாயு சீராக்கி இயந்திரம் மிகவும் பழமையானதாக இருப்பதுவும் தொடர்ச்சியாக அவை செயற்பாடற்று இருப்பதுவும் காரணமாக திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பாக அதேபோல தரவுகளின் பாதுகாப்பு தொடர்பாக இடம்பெறுகின்ற தாக்கம் பற்றி கவனித்துப்பார்த்து 2025 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டிற்கு 02 வாயு சீராக்கி இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்கிணங்க Frostair வகையான வாயு சீராக்கி இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்காக கேள்வி நடைமுறை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

UPS இயந்திரத்திற்காக 2025-06-01 ஆந் திகதியிலிருந்து 2026-05-31 ஆந் திகதி வரையான ஒரு ஆண்டு காலத்திற்கு ரூபா 206,500 தொகைக்கு சேவை உடன்படிக்கை செய்து கொள்வதற்காக கேள்வி மதிப்பீட்டுக்

		குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. 2025 செப்தெம்பர் 12 ஆந் திகதி வரை உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை.	
(ஆ)	திணைக்களத்தினால் பெறுகைக்கு முன்னர் முறையாக ஆய்வு செய்யாது 2014 திசெம்பர் 29 ஆந் திகதி ரூபா 16,320,304 செலுத்தி 18 UPS இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிரந்ததுடன் இதற்காக செயலாற்றல் பிணைமுறி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில் லை. 2022 செப்தெம்பர் 15 ஆந் திகதி வழங்குனரினால் தெரிவிக்கப்பட்டவாறு 11 UPS இயந்திரங்களின் உள்ளக துணைக் கருவிகள் செயற்பாடற்று உள்ளன. எவ்வாறாயினும் 2024 திசெம்பர் 11 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது அனைத்து இயந்திரங்களும் செயற்பாடற்று உள்ளன என அவதானிக்கப்பட்டது. இந்த இயந்திரங்களை சேவை செய்யும் நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்த பெறுமதியையும் மிகைத்து 05 உடன்படிக்கைகளின் கீழ் ரூபா 17,034,150 செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேசிய ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் பெறுமதி அதிக அளவிலான தரவுகளை செயற்படுத்துகின்ற கணனி இயந்திரங்களானது UPS இயந்திரங்கள் இல்லாது பாதுகாப்பின்றி செயற்படுகின்றது என அவதானிக்கப்பட்டது.	மொறட்டுவை பல்கலைக் கழகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட 03 UPS இயந்திரங்களும் பரீட்சித்து பார்க்கப்பட்டு அவர்களினால் தர அறிக்கை வழங்கப்பட்டதுடன் இந்த UPS இயந்திரத்தினை திருத்தம் செய்வதற்கு அதிக செலவு செய்ய வேண்டும் எனவும் மீண்டும் செயற்படும் நிலையில் எவ்வளவு காலம் இருக்கும் என நிச்சயமாக கூறமுடியாது எனவும் தெரிவிக்கப்பட்டதனால் இந்த இயந்திரம் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு ஒரு குழுவினை நியமிப்பதற்காக ஒரு மின்சார பொறியியலாளரின் பெயரினை குறிப்பிட்டு அனுப்புமாறு இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க குழு அறிக்கையினைப் பெற்றதன் பின்னர் இந்த இயந்திரம் தொடர்பாக மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கிறேன்.	தேசிய ரீதியாக மிகவும் முக்கியத்துவமான மற்றும் பெறுமதியான தரவுகள் அதிக அளவில் செயற்படுத்தப்படுகின்ற கனணி உட்பட பெறுமதியான இயந்திரங்களையும் அவற்றில் உள்ளடக்கப்பட்ட தரவுகளையும் பாதுகாப்பதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2023 திசெம்பர் 29 ஆந் திகதி ரூபா 2,980,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 10 லெப்டொப் கணனிகளின்	குடிநீரின் தர நிலைமை தொடர்பாக மனைப் பிரிவின் மீளாய்விற்காக UNICEF நிறுவனத்தினால்	திறைசேரி வழிகாட்டிக் கோவைக்கு இணங்க கொள்வனவு செய்யப்படுதல்

	மாதிரிகள் உரிய பொருள் விபரக் குறிப்பிற்கு இணங்கியிருப்பதனைப் பரீட்சித்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டிருக்காததுடன் அனைத்து கணனிகளும் திணைக்களத்திற்கு கிடைத்தததன் பின்னர் அவை திணைக்களத்தின் பொருள் விபரக்குறிப்பிற்கு இணங்கியிருக்கவில்லை என தகவல் தொழில்நுட்ப பிரிவினால் 2024 சனவரி 08 ஆந் திகதி சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உரிய சிபாரிசினை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது 2024 பெப்ரவரி 16 மற்றும் செப்தெம்பர் 03 ஆந் திகதிகளில் முழுப் பெறுமதியையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த கொள்வனவுகள் 2023 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	வழங்கப்பட்டுள்ள பணத்திலிருந்து திணைக்களத்திற்கு தேவையான பொருட்களையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்கான இணக்கப்பாடு அந்த நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளதனால் அப்பணத்திலிருந்தும் மிகுதிப் பணத்திற்காக உற்நாட்டு நிதியிலிருந்தும் செலுத்துவதற்கு திணைக்களத்தின் சிறிய பெறுகைக் குழு தீர்மானத்தினை வழங்கியிருந்தது. அதற்கிணங்க 08 லெப்டொப் கணனிகளுக்காக ரூபா 2,514,000 UNICEF நிதியிலிருந்தும் 02 லெப்டொப்களுக்கு ரூபா 628,500 உள்நாட்டு நிதியிலிருந்தும் செலுத்தப்பட்டது. UNICEF நிதி 2023-12-31 ஆந் திகதியளவில் செலுத்தி முடிவு செய்ய வேண்டியிருந்ததனால் அத்திகதிக்கு முன்னர் காசோலை எழுதுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2023 பெறுகைத் திட்டம் 2023-01-09 ஆந் திகதி தயாரிக்கப்பட்டதனால் இது அந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	வேண்டும்.
(ஈ)	2017-06-28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க திறைசேரி செயலாளரினால் வழங்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் கிரய முகாமைத்துவ	சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க சொத்துக்கள் சம்பந்தமான தகவல்களை உரிய அதிகாரிகளுக்கு	சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	சுற்றறிக்கையின் 07 மற்றும் 08 ஆம் பந்திகளின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிலிருந்து ஒரு நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் சம்பந்தமான தகவல்கள் உரிய காலாண்டின் முடிவில் கணக்கு தணிக்கையானர் நாயகத்தின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாயவாண்டின் போது உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருககவில்லை.	நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	
(உ)	2018-12-31 ஆந் திகதிய 04/2018 ஆம் இலக்க திறைசேரி செயலாளரினால் வழங்கப்பட்ட நிதியற்ற சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் சுற்றறிக்கையின் பின்னிணைப்பு I இன் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை அலுவலக உபகரணங்கள் மற்றும் மனைப் பொருட்களுக்கான மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உரிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க வாகனங்கள்/ இயந்திரங்கள்/ அலுவலக உபகரணங்கள் மனைப் பொருட்கள் முதலிய சொத்துக்களை மீண்டும் மதிப்பீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	-மேற்படி-
(ஊ)	தலைமை அலுவலக கட்டிடத்தில் காணப்படுகின்ற முக்கியமாக மற்றும் துரிதமாக கவனம் செலுத்தப்பட வேண்டிய குறைபாடுகள் தொடர்ாாக கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையின் மூலம் விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருந்தும் 2025 மே 30 ஆந் திகதி வரை குறைபாடுகள் சரி செய்யப்பட்டிருக்கவில்லை.	கட்டிடத்தின் நீர் ஒழுங்குமுறைக்காக கட்டிட திணைக்களத்திடமிருந்து மதிப்பீடு கோரப்பட்டுள்ளது. முதலாவது கட்டமாக மின்சார உயர்த்தி இயந்திர அறை மற்றும் 10 ஆவது மாடியி சாப்பாட்டு அறிறையின் மேல் ளுவயடி பகுதியின் நீர் ஒழுங்குமுறைக்காக ரூபா 33,718,000 மதிப்பீடு மற்றும் 05 ஆம் மாடியில் அமைந்துள்ள விலை மற்றும் ஊதிய பிரிவின் Eoncrete Slab இன் நீர்க்	தலைமை அலுவலக கட்டிடத்தில் காணப்படுகின்ற முக்கியமான குறைபாடுகளை துரிதமாக சரிசெய்தல் வேண்டும்.

		கசிவினை திருத்தம் செய்வதற்கு ரூபா 6,598,000 ஆன மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக அங்கீகாரம் கிடைத்துள்ளது. நிதி ஏற்பாடு முறையே 2025-05-16 ஆந் திகதி மற்றும் 2025-03-13 ஆந் திகதிகளில் கட்டிட திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்டுள்ள கால அட்டவணைக்கு இணங்க 2025 செப்தெம்பர் 29 ஆந் திகதியளவில் நடவடிக்கை முடிவுசெய்யப்படுதல் வேண்டும்.	
(எ)	கடந்த ஆண்டின் போது எனது அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தும் அச்சிடல் பிரிவில் விளைவற்றுக் காணப்பட்ட 40 வாயு சீராக்கி இயந்திரங்கள் தொடர்பாக 2025 மே 30 ஆந் திகதி வரை பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த வாயு சீராக்கி இயந்திரம் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் குழு அறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	விளைவற்றுக் காணப்படுகின்ற இந்த வாயு சீராக்கி இயந்திரங்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினால் பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஏ)	திணைக்களத்தின் சொத்துக்கள் பதிவேட்டிற்கு (CIGAS) இணங்க ஒவ்வொரு சொத்தும் எந்த பிரிவில் பௌதீகரீதியாக காணப்படுகின்றது என்பதனை கணக்காய்விற்கு உறுதிப்படுத்த முடியாதுள்ளது.	பதில் வழங்கப்படவில்லை.	சொத்துக்கள் எந்தப் பிரிவில் பௌதீக ரீதியாக காணப்படுகின்றது என்பது உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

5 மனித வளங்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
மீளாய்வாண்டின் இறுதியளவில் அங்கீகரித்த ஆளணியான 1,764 இல் 29 சதவீதம் அல்லது 518 வெற்றிடங்கள் காணப்பட்டது. அவ்வாறே திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பாக நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்துகின்ற சிரேஷ்ட மட்டத்திலுள்ள 146 பதவிகள் உள்ளடங்கலாக தேவையான வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு அல்லது தேவைப்பாட்டிற்கு இணங்க அங்கீகரித்த ஆளணியினரை திருத்தம் செய்து கொள்வதற்கு 2025 மே 30 ஆந் திகதி வரை முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நாட்டில் உருவாகிய பொருளாதார பிரச்சினைகளை முன்னிட்டு அரசாங்க சேவைக்காக திறந்த அடிப்படையில் ஆட்களை சேர்த்துக்கொள்வது நிறுத்தப்பட்டதனால் பல ஆண்டுகளாக திணைக்களத்திற்கு புதிய ஆட்சேர்ப்புக்களை செய்யப்படவில்லை. 22 புள்ளிவிபரவியலாளர் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் விண்ணப்பங்களை கோரும் அறிகவித்தல் அங்கீகாரத்திற்காக 2024-07-23 ஆந் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 71 புள்ளிவிபர உத்தியோகத்தர் பதவிகளுக்காக மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையின் கீழ் உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு திருத்திய ஆட்சேர்பபு நடைமுறையினை அங்காரத்திற்காக 2024-10-24 ஆந் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டது.	உரிய ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து முறைப்படியாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரித்த ஆளணியினரை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.